# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

24.08.2026 துளிகள் – 34


## புறம்பான மனுஷன் அழிந்து, உள்ளான மனுஷன் வளரட்டும்!

நமக்கு 2கொரிந்தியர்4:16-18 நமக்கும் எடுத்துரைக்கும் அற்புத செய்தி என்னவெனில்.... "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்து...." என வாசிக்கிறோம். நம் புறம்பான மனுஷன் அழிவதற்காக நம்மில் யாராவது கவலை கொள்வார்களா? எப்படியாயினும், நம் எல்லோருடைய புறம்பான மனுஷன் என்றாவது ஒருநாள், அழியத்தானே போகிறான்! தொடர்ந்து இந்த வசனம் கூறுவதைக் கேளுங்கள், உபத்திரவங்களின் மூலமாய் புறம்பான மனுஷன் அழியும்போது ".... உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிறான்" என்றல்லவா கூறுகிறது! இதைக் காட்டிலும் ஓர் மகிமை யான செய்தியை நீங்கள் எங்காகிலும் கேள்விப்பட்டதுண்டா? என்ன ஆச்சரியம், நம் புறம்பான மனுஷன் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் நம் உள்ளான மனுஷனோ நாளுக்கு நாள் புதிதாக்கப்படும் ஆச்சரியம்!!

**– ரத்னம்**